செ.வெ.எண்: 10 நாள்: 03.08.2016

# பத்திரிகைச்செய்தி

தமிழ்நாட்டில் இந்தியத்தேர்தல் ஆணையத்தின் மூலம் நடத்தப்பட்ட 2016 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலில் நமது மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை, அறந்தாங்கி, விராலிமலை, கந்தர்வக்கோட்டை, திருமயம், ஆலங்குடி ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடி மையங்களில் மொத்தம் 5020 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (வாக்குப்பதிவு இயக்கும் கருவி 2796, கட்டுப்பாட்டு கருவி 2224) பயன்படுத்தப்பட்டன. இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணிக்கை முடிவுற்றவுடன் முழு பாதுகாப்புடன் மாவட்ட ஆட்சியரக காப்பறையில் வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது. தற்பொழுது இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உத்திரப்பிரதேச மாநிலம் பதேபூர் மாவட்டத்திற்கு பலத்த போலீஸ் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த 5020 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் 500 பெட்டிகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, துப்பாக்கி ஏந்திய காவலர்கள் உதவியுடன் சரக்குந்துகளில் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிகளை சிறப்புடன் மேற்கொண்டு எவ்வித தடைகளுமின்றி பதேபூர் மாவட்டத்திற்கு கொண்டு செல்ல சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**